

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 24-05-2025

# உரிமைக்காக மீண்டும் ஒரு வழக்கு

**எல்லா உரிமைகளையும் வழக்குப் போட்டு உச்சநீதிமன்றத்தின் மூலமாகத்தான் பெற வேண்டியதாக இருக்கிறது. ஆனால் இந்த நாட்டுக்கு 'ஜனநாயக நாடு' என்று பெயர். மக்களாட்சி மாண்பைச் சிதைப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதன் செவிகளுக்கு மக்கள் குரல்கள் விழாது. உச்சநீதிமன்றம் ஓங்கிச் சொன்னால்தான் 'சில நேரங்களில்' உறைக்கும். பல நேரங்களில் உச்சநீதி மன்றத்தையும் அவமானப்படுத்துவார்கள்.**

"ஒன்றிய அரசு வழங்க வேண்டிய ரூ.2151.59 கோடி கல்வி நிதியும், அதற்கான ஆறு சதவீத வட்டி ரூ.139.70 கோடியும் சேர்த்து 2,291 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசுக்கு வழங்க உத்தரவிட வேண்டும்" என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடுத்துள்ளது. 'வழக்குப் போடப் போகிறோம்' என்று மூன்று நாட்களுக்கு முன்புதான் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். சொன்னதைச் செய்து விட்டார்கள்.

தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறை இந்தியாவின் இரண்டாம் இடத்தை நோக்கி உயர்ந்துள்ளது. தமிழ்நாடு அரசின் கல்வித் திட்டம் ஏற்கனவே சிறப்பான முறையில் உள்ளது. இருமொழிக் கொள்கையை தமிழ்நாடு பின்பற்றி வருகிறது. தமிழ் தாய்மொழி அல்லாத மாணவர்களுக்கு மற்ற மொழிகளில் படிக்க போதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2010 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டம் மூலம் மாநிலம் முழுவதும் சமமான பாடத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டின் கல்வித்தரம் சிறப்பாக உயர்ந்துள்ளது. 2006 ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையில் தமிழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஆண்டு தேர்ச்சி விகிதம் அதிகமாகி வருகிறது.

பள்ளிக் கல்வி சிறப்பாக இருப்பதால்தான், கல்லூரிக் கல்விக்கான மாணவர்கள் சேர்க்கையும் அதிகமாகி வருகிறது. ஆண்டுதோறும் ஏராளமான புதுப்புதுத் திட்டங்கள் கல்வித் துறையில் புகுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் மாணவ, மாணவியர் மத்தியில் மிகச்சிறந்த மலர்ச்சியை உருவாக்கி வருகிறது. இந்த ஆண்டு மட்டும் பள்ளிக் கல்வித் துறைக்கு 47 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய பள்ளிக் கல்வித் துறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உதவிகளைச் செய்ய முன்வந்திருக்க வேண்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசு. மாறாக, இந்த வளர்ச்சியைத் தடுக்கும் செயலைத்தான் செய்து வருகிறார்கள்.

ஒருங்கிணைந்த கல்வி (சமக்ர சிக்ஷா) திட்டம் என்பது பாலர் பள்ளி முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான முழு வரம்பையும் உள்ளடக்கிய பள்ளிக் கல்விக்கான ஒருங்கிணைந்த திட்டம். இத்திட்டம் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தைச் செயல்படுத்துதலையும், நிலையான, தரமான கல்வி வளர்ச்சியையும் இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு 60 சதவீதமும், மாநில அரசு 40 சதவீதமும் தனது நிதிப் பங்களிப்பை இந்தத் திட்டத்துக்காக வழங்குகின்றன.

தமிழகத்தில் 'தேசிய கல்விக் கொள்கை 2020' மற்றும் பி.எம். திட்டத்தைச் செயல்படுத்தாத காரணத்தால், 'சமக்ர சிக்ஷா' அபியான் திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் வழங்க வேண்டிய ஒன்றிய அரசின் பங்களிப்புத் தொகையான ரூ.2,152 கோடி நிதியை ஒன்றிய அரசு இதுவரை விடுவிக்காமல் நிறுத்தி வைத்துள்ளது.

**ஒருங்கிணைந்த கல்வித் திட்டம் என்பது வேறு, பி.எம். திட்டம் என்பது வேறு. ஒரு திட்டத்தை இன்னொரு திட்டத்துக்கான நிபந்தனையாக ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆக்கிவிட்டார். 'பி.எம். திட்டம்' என்பது இந்தியை தமிழ்நாட்டுக்குள் திணிக்கும் திட்டமாகும். "இதனை ஏற்க மாட்டோம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.**

**"இதுதான் உங்களது நோக்கமாக இருக்குமானால் 2 ஆயிரம் கோடி அல்ல, 10 ஆயிரம் கோடி கொடுத்தாலும் ஏற்க மாட்டோம்" என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி தமிழ்நாடு அரசு சொல்லும் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை தர்மேந்திர பிரதான். அதன் பிறகு அவர் அமைதியாகி விட்டார். ஆனாலும் நிதியை ஒதுக்கவில்லை. 'ரூ.2000 கோடியை ஒன்றிய அரசு ஒதுக்காவிட்டாலும், தமிழ்நாடு அரசு ஒதுக்கும்' என்றும் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை.**

தமிழ்நாடு அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில்...

★ 'சமக்ர சிக்ஷா' திட்டத்தின்கீழ் நிதியைப் பெறுவதற்கான தமிழகத்தின் உரிமையை ஒன்றிய அரசு தடுத்து நிறுத்துவது என்பது, கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது மட்டுமின்றி, கூட்டாட்சியை அவமதிப்பதாகும்.

★ அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக ஒரு மாநிலத்தில் குறிப்பிட்ட கல்விக் கொள்கையை அமல்படுத்தவும், ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வரும் கல்வி முறையில் இருந்து விலக வேண்டும் எனவும் ஒன்றிய அரசு தமிழக அரசை கட்டாயப்படுத்தி வருகிறது.

★ தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தக் கட்டாயப்படுத்துவது என்பது மாநில சுயாட்சி மற்றும் கட்டமைப்பையும், கல்வி தொடர்பான மாநில அரசின் சட்டங்களையும் தகர்க்கும் செயலாகும்.

★ எந்த மொழியையும் எவர் மீதும் கட்டாயப்படுத்தி திணிப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது.

- என்று, அரசமைப்புச் சட்டம், கூட்டாட்சித் தத்துவம், மாநில உரிமைகள், தமிழ்நாட்டின் தனித்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய வாதங்கள் வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு கல்வி நிதி வழங்காததால் 43.94 லட்சம் மாணவர்கள், 2.21 லட்சம் ஆசிரியர்கள், 32,701 இதரப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே உச்சநீதி மன்றம் செல்வதைத் தவிர தமிழ்நாடு அரசுக்கு வேறு வழியில்லை.

**ஆளுநர் விவகாரத்தில் நெத்தியடி தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்றம், இந்த விவகாரத்திலும் அதே மாதிரியான உரிமையை நிலைநாட்டும் என நம்புவோம்.**



சென்னை – அண்ணா அறிவாலயம் – கழக அலுவலகத்தில் நேற்று முன்தினம் (22.05.2025) கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை – கழகத் தணிக்கைக் குழு உறுப்பினர்களான வ.வேலுச்சாமி, தி.அ.முகமது சகி, கு.பிச்சாண்டி, என்.சுரேஷ்ராஜன், ஏனாதி பாலசுப்பிரமணியம், ஆர்.டி.சேகர், வழக்கறிஞர் சரவணன் ஆகியோர் சந்தித்து – கழக தணிக்கைக்குழுவின் அறிக்கையினை வழங்கினார்கள். அப்போது கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் உடனிருந்தனர்.

# "வள்ளுவர் மறை - வைரமுத்து உரை"

## திருக்குறளுக்குப் புதிய உரை எழுதுகிறார், கவிப்பேரரசு வைரமுத்து!

**சென்னை, மே 24 -**

**திருக்குறளுக்குக் கவிஞர் வைரமுத்து உரை எழுதியிருக்கிறார். தான் எழுதிய திருக்குறள் உரைக்கு 'வள்ளுவர் மறை வைரமுத்து உரை' என்று பெயர் சூட்டியிருக்கிறார். இந்த உரைநூல் ஜூலை மாதம் வெளியிடப்படவிருக்கிறது.**

கன்னியாகுமரியில் கலைஞர் அமைத்த திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடந்தது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கவிஞர் வைரமுத்து. திருக்குறளுக்கு உரை எழுதப்போவதாக ஓர் அறிவிப்பை வெளியிட்டார். இப்போது முப்பாலுக்கும் உரை எழுதி முடித்திருக்கிறார்.

திருக்குறளுக்குக் காலந்தோறும் உரைஎழுதப்பட்டு வந்திருக்கிறது. உரையாசிரியர்கள் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்றபடி தங்கள் கொள்கைக்குத் தக்கபடி வெவ்வேறு உரைகளை எழுதியிருக்கிறார்கள்.

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் பிற்காலத்தில் வ.உ.சிதம்பரனார், திரு.வி.கல்யாணசுந்தரனார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ஞா.தேவநேயப் பாவாணர், நாமக்கல் கவிஞர், மு.வரதராசனார், புலவர் குழந்தை, சி.இலக்குவனார், முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் என்று பலரும் உரை எழுதியிருக்கிறார்கள். அந்த வரிசையில் கவிஞர் வைரமுத்துவும் இப்போது புதிய உரை எழுதியிருக்கிறார்.

தான் எழுதிய உரை மாறுபட்டது என்று கவிஞர் வைரமுத்து



தெரிவிக்கிறார். அறவியலுக்காக எழுதப்பட்ட திருக்குறளுக்கு, அறிவியலின்படி உரை எழுதியிருப்பதாக அறிவிக்கிறார். திருவள்ளுவரின் கொள்கையைப் பகுத்தறிவுக்கு ஏற்ற வண்ணம் புரிந்து கொண்டு உரை எழுதியிருப்பதாகக் கவிஞர் வைரமுத்து கூறுகிறார்.

"இது டிஜிட்டல் தலைமுறைக்கானது; மின்னல் தெறிக்கும் மொழியில் எழுதப்பட்டது; எளிமையும் துல்லியமும் உடையது; பண்டிதரையும் பாமரரையும் ஒருசேரச் சென்றடைவது. அறத்துப்பாலும் பொருட்பாலும் ஞானத் தமிழில் இருக்கும்; இன்பத்துப் பால் கவிதை மொழியில் இனிக்கும்" என்று தெரிவிக்கிறார்.

"ஒவ்வொரு தமிழரின் இல்லத்திலும் உள்ளத்திலும் இந்த நூல் இருக்க வேண்டும் என்பது தனது வளையாத குறிக்கோள்" என்கிறார் வைரமுத்து.

'வள்ளுவர் மறை வைரமுத்து உரை' ஜூலையில் வெளியிடப்படும். தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் கிடைக்கச் செய்யப்படும் என்று சொல்லும் கவிஞர் வைரமுத்து, 'என் பிறவிப் பெருங்கடமை நிறை வேறியிருப்பதாக நிறைவு கொள்கிறேன்' என்று பெருமிதம் கொள்கிறார்.

# கிழக்குக் கடற்கரைச் சாலையில் விரிவாக்கப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

சென்னை, மே 24-

கிழக்குக் கடற்கரைச் சாலை (ECR) - ஆறு வழிச்சாலையாக விரிவுபடுத்தப்பட்டு வரும் பணிகளையும், திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோவில் தேர் செல்வதற்கு சாலை அகலப்படுத்தும் பணிகளையும் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை கிழக்குக் கடற்கரைச் சாலையில், நெடுஞ்சாலைத்துறை மூலம் நடைபெற்று வரும் பணிகளை நேற்று முன்தினம் (22.05.2025) அமைச்சர் எ.வ.வேலு களஆய்வு மேற்கொண்டார்.

"சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் விரைவான பயணத்தை உறுதி செய்யும் வகையில், மாநில நெடுஞ்சாலைத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் திருவான்மியூர் முதல் அக்கரை வரை 10.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஆறுவழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**உயர்மட்ட மேம்பாலம்!**

அதேபோல், திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை 14 கிலோ மீட்டர் தொலைவிற்கு உயர்மட்ட மேம்பாலமும் அமைக்கப்பட உள்ளது.

முன்னதாக இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் வரும் சென்னை, திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோவிலில் உள்ள தேர் செல்வதற்கான வழிகளையும், அங்கு மேற்கொள்ளப்படவுள்ள சாலை விரிவாக்கப் பணிகளையும் களஆய்வு செய்தார்கள்.

கிழக்கு கடற்கரை சாலையில் 2 மீட்டர் அகலத்திற்கு அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளையும் ஆய்வு செய்து, கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க ஒப்பந்ததாரர்களுக்கு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் டாக்டர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை திருவான்மியூரில், நேற்று முன்தினம் (22.05.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கிழக்குக் கடற்கரைச் சாலை (ECR) ஆறு வழிச் சாலையாக விரிவுப்படுத்தப்பட்டு வரும் பணிகளையும், திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோவில் தேர் செல்வதற்கு சாலை அகலப்படுத்தும் பணிகளையும், நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் டாக்டர் பி.என்.ஸ்ரீதர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருச்சி தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் தெற்கு மாவட்டச் செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கதிரவன் அண்ணாமலை மணிராஜ். தெற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்த கூட்டத்தில் திமுக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு கலந்து கொண்டார். கூட்டத்தில் அவர் பேசுகையில், வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றி பெற்று மீண்டும் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கும். திருச்சி மண்டலத்தில் 41 தொகுதிகள் உள்ளது தற்போதைய சூழலில் 41 தொகுதிகளிலும் திமுக தான் முழுமையாக வெற்றி பெறும் என்கிற நிலை உள்ளது என பேசினார்.